**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண். 172/2016**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.J.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10 வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். வளர்மதி** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**பி.சா.2 முதல் விசாரணை**

**22.10.2025**

நான் தற்போது திருப்போரூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் சீனியர் பெயிலிபாக பணிபுரிகிறேன். நான் மதுராந்தகம் சார்பு நீதிமன்றத்தில் சீனியர் பெயிலிபாக பணிபுரிந்த போது இவ்வழக்கு அசல் வழக்கு எண்.172/2016 சொத்தில் உள்ள அசையா சொத்துகளின் அம்சங்களை மதிப்பீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நான் தாவாசொத்தில் உள்ள அசையா சொத்துகளை மதிப்பீடு செய்து நான் அறிக்கையை

இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன் அதுதான் நீ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த சொத்தின் மதிப்பு, சிமெண்ட் சீட் போட்ட கட்டிடத்தின் மதிப்பு, பாழடைந்த கிணறு மற்றும் மின் இணைப்பு உட்பட சொத்துகளுக்கு ரூ.65,70,000 மதிப்பீடு செய்து அந்த அறிக்கையை இந்நீதிமன்றத்தில் வாரண்டுடன் திருப்பியுள்ளேன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**1. நான் எப்போது தாவா கிராமத்திற்கு சென்றேன் என்றால் 20.03.2018 அன்று சென்றேன். நான் தாவா கிராமத்திற்கு செல்வதற்கு முன்பு நீதிமன்ற உத்தரவை தெரிந்து கொண்டேனா அல்லது உத்தரவை எடுத்து சென்றேனா என்றால் உத்தரவை படித்து பார்த்து எனக்கு கொடுத்த வாரண்டை எடுத்து சென்றேன். உத்தரவின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் படித்து பார்த்துதான் சென்றேன். பொதுவாக ஒரு சொத்தை மதிப்பீடு செய்ய செல்லும்போது உத்தரவு நகலை எடுத்து சென்று அந்த சொத்தை அடையாளம் காண வேண்டும் என்றால் எனக்கு கொடுத்த வாரண்டில் சொத்தின் விவரங்கள் இருந்தது அதை வைத்து நான் ஊர்மக்களிடம் கேட்டு சொத்தை அடையாளம் கண்டேன். எனக்கு கொடுத்த வாரண்டை**

கிராம நிர்வாக அதிகாரி உதவியுடன்தான் சொத்தை மதிப்பீடு செய்ய வேண்டும் என்றுள்ளது என்றால் இல்லை அவ்வாறு எதுவும் அதில் சொல்லபடவில்லை.

2. நான் 20.03.2018ல் கொடுத்த அறிக்கையில் கிராம நிர்வாக அதிகாரி இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா கிராமத்திற்கு செல்லும்போது கிராம நிர்வாக அதிகாரி இல்லாததால் வருவாய் துறை ஆவணங்கள் பார்க்க முடியவில்லை என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அதிகாரியின் உதவியாளர் ஆவணங்களை காட்டினார். எனது அறிக்கையில் மேற்சொன்ன விவரங்களை நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் பார்வையிட்ட வருவாய் துறை ஆவணத்தில் தாவாசொத்து எந்த வகையை சேர்ந்தது என்று எனது அறிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான்.

3. நான் பார்வையிட்ட வருவாய் துறை ஆவணத்தில் தாவாசொத்தின் தீர்வை மதிப்பு என்னவென்று எனது அறிக்கையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக உதவியாளரிடம் நான் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். பொதுவாக நிலம் மதிப்பீடு பார்க்கவேண்டும்

என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்தின் மதிப்பீட்டை பார்க்க வேண்டும் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அதிகாரி, சொத்தின் மதிப்பை கூறுவார். சொத்தின் மதிப்பை சரியாக சொல்லகூடியவர் கிராம நிர்வாக அதிகாரி மட்டும்தான் என்றால் கிராம நிர்வாக அதிகாரி, அவரது உதவியாளர் மற்றும் ஊர்மக்கள் குறிப்பிடலாம்.

**4**. தாவாசொத்து ஒரு செண்டின் மதிப்பு ரூ.**20,000** என்று யார் சொல்லி நான் எனது அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் அக்கம்பக்கத்தில் உள்ள நபர்கள் நிலத்தின் மதிப்பை சொன்னதை வைத்து குறிப்பிட்டுள்ளேன். யார் சொன்னார்கள் என்றால் எனக்கு அவர்கள் பெயர் தெரியாது. கட்டிடத்தின் மதிப்பு ரூ.**50,000** என்று மதிப்பீடு செய்வதற்கு நான் பொறியாளர் கிடையாது என்றால் சரிதான். கட்டிடத்தின் மதிப்பு ரூ.**50,000** என்று நிர்ணயிக்க யார் சொன்னார்கள் என்றால் அக்கம்பக்கதினர் வைத்துதான் குறிப்பிட்டுள்ளேன்.

**5**. அக்கம்பக்கத்தினர் என்றால் தாவாசொத்தின் எந்த பக்கத்தில் உள்ள நபர்கள் என்று குறிப்பிட்டு எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அக்கம்பக்கத்தினர் அந்த ஊரை சேர்ந்தவர்கள்தான்

என்று குறிப்பிட்டு எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் அந்த ஊரை சேர்ந்தர்வர்கள் தான். அந்த ஊரை சேர்ந்தர்வர்கள் என்று யார் அடையாள படுத்தி காட்டினார்கள் என்றால் அவ்வாறு எதுவும் காட்டவில்லை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். எனது அறிக்கையில் மின் இணைப்பு பற்றி குறிப்பிட்டுள்ளேன். அது எந்த வகைப்பாடு மின் இணைப்பு என்று தெளிவாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பார்வையிட்ட போது தாவாசொத்தில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது எத்தனை மாதம் பயிர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4.** தாவாசொத்தில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கரும்பு பயிரிடப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. அறிக்கையின் சிமெண்ட் சீட் போட்ட கட்டிடம் என்று குறிப்பிட்டுள்ளேன். அதன் பரப்பளவு பற்றி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த கட்டிடம் பழுதடைந்ததா அல்லது பயன்பாட்டில் உள்ளதா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு செண்ட் ரூ.**20,000** என்று சொல்லின் அடிப்படையில்தான் நிர்ணயம் செய்தேன் ஆவணங்கள் எதுவும் பார்த்து

செய்யவில்லை என்றால் சரிதான்.

**5.** வாரண்டில் சொல்லியுள்ள சொத்தின் நான்கு எல்லைகளில் உள்ள நபர்களை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது அறிக்கையில் 1ம் பிரதிவாதியிடம் நான் கையொப்பம் வாங்கவில்லை என்றால் பொதுவாக நாங்கள் வாங்கமாட்டோம். சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு அரசின் வழிகாட்டு மதிப்பீடு இருக்கிறது அதை பார்வையிடாமல் யாரோ சொன்னதை வைத்து தாவாசொத்தின் மதிப்பிட்டை எனது அறிக்கையில் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யாமல் சொல் கேள்வி மூலம் மதிப்பீடு செய்து வாரண்டை சரிவர நிறைவேற்றவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாவாசொத்தின் உண்மையான மதிப்பீட்டை சொல்லவில்லை என்றால் சரியல்ல.